செய்தி வெளியீடு எண்.55 நாள்.26.01.2018

**பூண்டி ஊராட்சி ஒன்றியம், மாமண்டூர் ஊராட்சியில் நடைபெற்ற கிராமசபை கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டார்**

திருவள்ளூர் மாவட்டம், பூண்டி ஊராட்சி ஒன்றியம், மாமண்டூர் ஊராட்சியில் தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) திரு.சே.கு.கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்து விவாதித்தலும், திட்ட அறிக்கை குறித்தும், குடிநீர் சிக்கனமாக பயன்படுத்துதல் குறித்தும், கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல், கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டம் (VPDP), அந்தியோதயா இயக்கம், பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டப்பணிகள் குறித்தும், ஊராட்சிப் பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப் பணிகள் முன்னேற்றம் மற்றும் நிதி செலவின விபரங்கள் குறித்து விவாதித்தல், கிராம வளம் மற்றும் தூய்மைக்கான இருவார இயக்கத்தினை அக்டோபர் 1 முதல் 15 வரை சிறப்பிக்க கொண்டாடுவது குறித்து விவாதித்தல், பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும்,

முழு சுகாதார தமிழகம் : திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற ஊராட்சிகள் கழிப்பறை கட்டி பயன்படுத்தும் பயனாளிகளுக்கு பாராட்டு தெரிவித்தல் குறித்தும், குழுக்களுக்கு ஒத்துழைப்பு, கழிப்பறை இல்லாதோர் விவரப்பட்டியல், திறந்தவெளியில் மலம் கழிப்பதால் ஏற்படும் தீமைகள் குறித்தும், ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள், பள்ளி கழிப்பறைகள் மற்றும் அங்கன்வாடி மையக் கழிப்பறைகள் குறித்தும், திடக்கழிவு மேலாண்மை திட்டம் பற்றியும், மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், சமூக தணிக்கை, மகளிர் திட்டம், பொது விநியோக திட்டம், இதர பொருட்கள், தேசிய வாக்காளர் தினம் மற்றும் வாக்காளர் பட்டியல் குறித்தும் மற்றும் இதர பொருட்கள் குறித்து கிராம சபை கூட்டத்தில் பொதுமக்கள் முன்னிலையில் விவாதிக்கப்பட்டது.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கிராம சபை கூட்டத்தில் கூறியதாவது: இன்றைய தினம் குடியரசு தினத்தை முன்னிட்டு சிறப்பு கிராம சபை கூட்டம் மாவட்டம் முழுவதும் 526 ஊராட்சிகளிலும் நடத்தப்படுகின்றது. கிராமத்தினர் அனைவரும் ஒற்றுமையாக கிராம சபை கூட்டத்தில் பங்கேற்றது பாராட்டுதலுக்குரியது. கிராமத்திற்கு தேவையானவைகளை முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்றுவதற்கு நீங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும், பிப்ரவரி-2018-க்குள் திருவள்ளூர் மாவட்டத்தை திறந்தவெளி மலம் கழித்தலற்ற மாவட்டமாக அறிவிப்பு வெளியாகவுள்ளது. எனவே, மாமண்டூர் ஊராட்சியில் மொத்தம் உள்ள 315 வீடுகளில் 61 வீடுகளில் தனிநபர் இல்லக் கழிவறைகள் மிக விரைவில் அமைக்கப்பட்டு ஊராட்சியில் திறந்தவெளி மலம் கழித்தலற்ற ஊராட்சியாக திகழ வேண்டும். இதற்கு பொதுமக்களாகிய நீங்கள் அனைவரது வீட்டிலும் தனிநபர் கழிவறைகளை அமைக்க வேண்டும் என மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன். கிராம மக்கள் அனைவரும் குப்பைகளை குப்பைத்தொட்டிகளில் மட்டுமே போடவேண்டும். அது தவிர்த்து காலியிடங்களிலோ, குளம், குட்டைகளிலோ குப்பைகளை போடுவதை முழுமையாக தவிர்க்க வேண்டும்.

வரும் பிப்ரவரி 24-ம் தேதியிலிருந்து வேலைகளுககு செல்லும் மற்றும் சுய தொழில் புரியும் மகளிர்களுக்கு 50 சதவிகிதம் அல்லது ரூ. 25 ஆயிரம் மானிய விலையில் பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கப்படவுள்ளது. இதற்கான விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட நகராட்சி, பேரூராட்சி மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம். 18 முதல் 40 வயது வரை, 8-ம் வகுப்பு தேர்ச்சி / தோல்வி, வாகனம் ஓட்டத் தெரிந்த உழைக்கும் மகளிர்களுக்கு இத்திட்டத்தில் பயன்பெறலாம். விண்ணப்பித்தவர்களில் தகுதி வாய்ந்த விண்ணப்பங்களை உரிய பரிசீலனைக்குப் பின்னர் அவர்களுக்கு மானிய விலையில் பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கப்படும். பெண் குழந்தைகளுக்கு நல்ல கல்வியறிவு வழங்கி, சமுதாயத்தை வளம்பெற செய்ய வேண்டும். பெண் குழந்தை திருமணங்களை பெற்றோர்கள் அனைவரும் தவிர்க்க வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறினார்.

முன்னதாக, முழு சுகாதாரத் தமிழகம் - முன்னோடி தமிழகம் என்ற தலைப்பில் உறுதி மொழியினை கிராம மக்கள் அனைவரும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் முன்னிலையில் ஏற்றுக்கொண்டனர். பின்னர், பொதுமக்களிடமிருந்து 50-க்கும் மேற்பட்ட கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு உரிய முறையில் தீர்வு காணப்படும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உறுதியளித்தார். மாமண்டூர் ஊராட்சியைச் சேர்ந்த 23 பயனாளிகளுக்கு தனிநபர் இல்லக் கழிவறை கட்டுவதற்கான அரசு மானிய தவணைத்தொகை ரூ.12 ஆயிரம் வீதம் ரூ.2 இலட்சத்தி 76 ஆயிரம் மதிப்பிலான காசோலையை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் உதவி இயக்குநர் (ஊராட்சி) திரு.ஸ்ரீதர், வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.) திரு. லதா, தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) திரு,சே.கு.கிருஷ்ணன், ஊத்துக்கோட்டை வட்டாட்சியர் திருமதி.கிருபாஉஷா, அரசு அலுவலர்கள் மற்றும் கிராம மக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**